**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.62/2015**

தேதி . 16.12.2021

பெயர் . ஆனந்த நாயுடு

த/பெ . சுப்பா நாயுடு

வயது . 73

வா.சா. 1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதி எந்த சர்வே எண்ணில் சுற்றுசுவர் கட்டியுள்ளார் என்றால் 150/22, 24, 27. சர்வே எண்.150/25, 26ல் பிரதிவாதிகள் தலையிடவில்லை என்றால் சரிதான். 150/25, 26 பிரதிவாதிகளின் இடம் என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.150/25, 26ல் பிரதிவாதிகள் ரோடு போடுவதற்காக கொடுத்தார்களா ரோடு உள்ளது என்றால் இல்லை காலி மனை அது கிராம நத்தம். வா.த.சா.ஆ.3ல் சர்வே எண்.150/25 ரோடு என்று உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சர்வே எண்.150/22, 24,27 அரசாங்க சொத்து என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.த.சா.ஆ1ல் FMBபடி சர்வே எண்.150/26 யாருடையது என்றால் காலிமனை பட்டா யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. சீனிவாச நாயுடு மற்றும் நரசிம்ம நாயுடுவும் சகோதரர்கள் என்றால் சரிதான். சீனிவாச நாயுடுவின் மகன் ஜெயராம நாயுடு என்றால் சரிதான். சீனிவாச நாயுடு மற்றும் நரசிம்ம நாயுடுவுக்குதான் வழக்கு மற்றும் ஊரில் உள்ள சொத்தும் பாத்தியம் என்றால் சரிதான். நரசிம்ம நாயுடு, அவரது அண்ணன் மகன் ஜெயராம நாயுடுவின் மகள் ஷியாமிளா பெயரில் உயில் எழுதினார் என்றால் சரிதான். ஷியாமிளா இறந்து விட்டார் என்றால் சரிதான். நரசிம்ம நாயுடு, அவரது அண்ணன் மகன் ஜெயராம நாயுடுவின் மகள் ஷியாமிளா பெயரில் உயில் எழுதினார் ஆனால் ஷியாமிளா இறந்த பிறகு மீண்டும் அதே சொத்தை அவருடைய அண்ணன் மகன் ஜெயராம நாயுடு மற்றும் அவரது மனைவி புஷ்பா பெயரில் 1969ல் உயில் எழுதி வைத்தார் என்றால் எனக்கு தெரியாது ஊரில் பேசிக் கொண்டார்கள். உயில்படி அதிலுள்ள சொத்தைஅவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஜெயராமன் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவருடைய மகள் கீதாவுக்கு தானப் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். பிராதை காட்டி அதில் 3வது கையெழுத்து யாருடையது என்றால் தெலுங்கில் என் கையெழுத்துதான், முதலில்

உள்ளது எஸ்.பாபு கையெழுத்துதான் என்றால் சரிதான். 1ம் வாதி தகராறு செய்ய மாட்டேன் என்று சம்மத கடிதம் காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்தார் அதிலுள்ள கையெழுத்து 1ம் வாதி பாபுதான் என்றால் சரிதான். அந்த சம்மதக் கடிதத்தை பி.த.சா.ஆ.1ஆக குறியிடப்படுகிறது(எதிர்தரப்பு ஆட்சேபணையுடன்) வழக்கு சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 3 சர்வே எண்ணும் சேர்த்து 18 செண்ட் தான். தனித்தனியாக சொல்ல முடியுமா என்றால் தெரியாது. அதில் பிரதிவாதி 10 செண்ட்டில் பயிர் வைத்துள்ளார் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி செட் கட்டினார் நான் எப்போது தகராறு செய்தேன் என்றால் செட் கட்டியவுடன் நான் தகராறு செய்தேன் இடைக்கால உறுத்துக் கட்டளை பெற்றவுடன் ஊர்காரர்கள் அனைவரும் சேர்ந்து சுவரை இடித்து விட்டார்கள். 01/04/2015ல் பிரதிவாதிகள் புகார் கொடுத்தார்கள் அதில் சமரசமாக போனபிறகு நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அரசாங்க இடம் என்று சொல்கிறேன் ஆனால் கிராம நிர்வாக அலுவலர் சர்வேயர், வருவாய்த்துறை அதிகாரிகள், பிரதிவாதிகளின் சுவாதீனத்தை தொந்தரவு செய்யவில்லை என்றால் கிராம நிர்வாக அலுவலர் முதலில் புகார் கொடுத்தார். நான் சொல்வதுபோல் எதுவும் நடக்கவில்லை கிராம நிர்வாக அலுவலர் புகார் கொடுக்கவில்லை வழக்கிலும் தோன்றாத்தரப்பினர் ஆனதால் அரசாங்கத்திற்கு சொந்தம் என்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.150/27 இடிந்த வீடு என்றுதான் உள்ளது என்றால் எப்பொழுதுமே வீடு இருந்ததில்லை கிணறு. சர்வே எண்.150/22 காலிமனை பரசுராமன் பெயரில் உள்ளது கிராம நத்தம் புறம்போக்கு கிடையாது என்றால் யார்பெயரிலும் இல்லை கிராம நத்தம் புறம்போக்குதான். சர்வே எண்.150/ 22, 24, 27 ஆதியில் புஞ்சை நிலமாக இருந்தது வருவாய்த்துறையினர் கிராமநத்தம் இடம் ஒதுக்கி வீட்டிற்கு பட்டா கொடுத்தார்கள் மீதி இடம் காலிமனையாகதான் குறிப்பிட்டு இருக்கும் என்றால் இல்லை காலிமனை புறம்போக்காதான் இருக்கும். பிரதிவாதிகளின் பூர்வீக சொத்து என்பதால் அவர்களிடமிருந்து பணம் வாங்க நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. கிராமநத்தம் பழைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து கிராமத்தில் பழைய சர்வே எண்.17/1,2,3,4 என்றால் தெரியாது. ரோடு சர்வே எண்.17/2 என்றால் தெரியாது. புதிய சர்வே எண்.150/17 என்றால் சரிதான். வழக்கு சொத்தில் ரோடு இல்லை ஊருக்கு ஓரத்தில் கிழக்கு பக்கத்தில் தான் உள்ளது பிரதிவாதி சொத்தை அபகரிக்க பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தைச் சுற்றி

பிரதிவாதிகள் இடம்தான் உள்ளது என்றால் வழக்கு சொத்தின் கீழண்டைப்பக்கம் பிரதிவாதிகள் சொத்து பயிர் செய்து வருகிறார்கள். தெற்கு பக்கம் பிரதிவாதிகள் வீடு என்றால் சரிதான். 30 வருடமாக வேப்பமரமும், 10 வருடமாக ஆலமரம் இருந்தது என்று சொல்லியுள்ளேன் அப்படி இல்லை என்றால் இருக்கிறது ரோட்டை ஒட்டி உள்ளது. மரங்கள் உள்ளதை நிரூபிக்க வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்குதான் சொந்தமானது அரசாங்கம் இடம் என்றால் பிரதிவாதிகள் பெயரில் நடவடிக்கை எடுப்பார்கள் பணம் பறிக்க இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**